




TNTAM 24702

# தமிழக எக்ஸ்பிரஸ் நியூஸ்

காலை நாளிதழ்

TAMILAGA EXPERESS NEWS








● மலர் : 1 ● இதழ் : 208 ● நாள் : 19-08-2024 ● தமிழ்நாளிதழ் ● திங்கட்கிழமை ● பக்கம் 4 ● விலை ரூ .7/- ● திண்டுக்கல்


## ‘தமிழ் வெல்லும்’ என்ற வாசகத்துடன் ரூ.100 மதிப்புள்ள

# கருணாநிதி நூற்றாண்டு நாணயம் வெளியீடு

## “கருணாநிதி ஒரு உயர்ந்த ஆளுமை, நாட்டின் வளர்ச்சியில் எப்போதும் நாட்டம் கொண்டவர்” – பிரதமர் மோடி புகழாரம்

சென்னை : ஆக. 19

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவம் பொறித்த நாணயம் வெளியீட்டுவிழா குறித்து முதல்வர் ஸ்டாலினுக்கு பிரதமர் மோடி கடிதம் எழுதியுள்ளார். அதில் பல தசாப்தங்களாக மக்களால் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலமைச்சராக நமது நாட்டின் வரலாற்றில் அழியாத முத்திரையை பதித்தவர் கருணாநிதி என்று புகழாரம் சூட்டியுள்ளார்.



கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா குறித்த அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவின் தலைசிறந்த புதல்வர்களில் ஒருவரான கருணாநிதியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் முக்கியமான தருணம் இது.

கருணாநிதி இந்திய அரசியல், இலக்கியம் மற்றும் சமூகத்தில் ஒரு உயர்ந்த ஆளுமை. அவர் தமிழகத்தின் வளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம் ஆகியவற்றில் எப்போதும் நாட்டம் கொண்டிருந்தார். ஒரு அரசியல் தலைவராக, சமூகம், கொள்கை மற்றும் அரசியல் பற்றிய ஆழமான புரிதலை அடிக்கோடிட்டுக் காட்டி, பல தசாப்தங்களாக மக்களால் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலமைச்சராக நமது நாட்டின் வரலாற்றில் அழியாத முத்திரையை பதித்தவர் கருணாநிதி.

பன்முகத் திறமைகளை உடைய ஆளுமையாகத் திகழ்ந்த கருணாநிதி, தமிழ் மொழியையும் பண்பாட்டையும் வளர்க்க எடுத்த முயற்சிகள் இன்றும் மக்களால் நினைவுகூரப் படுகின்றன. அவரது இலக்கியத் திறன் அவரது படைப்புகளால் பிரகாசித்ததுமட்டுமின்றி அவருக்கு ‘கலைஞர்’ என்ற அன்பான பட்டத்தையும் பெற்றுத் தந்தது.

அவரது நினைவு நாணயம் வெளியிடப்படும் நிகழ்வு, கருணாநிதியின் நினைவைப் போற்றும் விதமாகவும், அவரால் நிலைநிறுத்தப்பட்ட லட்சியங்களைப் போற்றுவதாகவும் அமைந்துள்ளது. இந்த நாணயம் அவரது மரபு மற்றும் அவரது சேவையின் நீடித்த தாக்கத்தை நினைவூட்டுவதாக இருக்கும்.

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த இந்தியாவைக் கட்டியெழுப்பும் நோக்கில் நாம் நம்பிக்கையுடன் முன்னோக்கிச் செல்லும்போது, கருணாநிதி போன்ற தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையும் சிந்தனைகளும் தேசத்தின் பயணத்தைத் தொடரும். கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா மாபெரும் வெற்றியடையட்டும்” என்று பிரதமர் மோடி அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சென்னை: ஆக. 19

சென்னையில் நேற்று நடந்த விழாவில், முன்னாள் முதல்வர் கருணாநிதிநூற்றாண்டு நினைவு நாணயத்தை மத்திய பாதுகாப்புதுறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட, முதல்வர் ஸ்டாலின் பெற்றுக் கொண்டார்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, அவரது உருவம் பொறிக்கப்பட்டு, ‘தமிழ் வெல்லும்’ என்ற வாசகத்துடன் ரூ.100 மதிப்புள்ள நாணயம் அச்சிடப்பட்டுள்ளது. இந்த நாணயம் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது. நாணயத்தை மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட, முதல்வர் ஸ்டாலின் பெற்றுக் கொண்டார்.



விழாவில், மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது: நாட்டின் தலைசிறந்த தலைவர் கருணாநிதி. இவர் தனது அரசியல் ஆளுமையை தமிழகம் மட்டுமின்றி, நாடு முழுவதும் இந்திய அரசியலில் விரிவுபடுத்தியவர். தமிழக மக்கள் நலனுக்காக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த நாட்டு மக்கள் நலனுக்காகவும், சமூகநீதிக்காகவும் பாடுபட்டவர். தனது அரசியல் பயணத்தில் 5 முறை முதல்வராக பதவி வகித்து, விளம்புநிலை மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய பாடுபட்டார். பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார். மக்களாட்சி கட்டமைப்பை வலுப்படுத்த அரும்பாடு பட்டார்.

சுதந்திர தினத்தன்று மாநில முதல்வர்கள் தேசியக் கொடியேற்ற அனுமதி பெற்றுத்தந்தார். அதைத் தொடர்ந்து முதல் முதல்வராக 1974-ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார்.

மக்களாட்சி தத்துவத்தில் மிகவும் நம்பிக்கை கொண்டவர். பல்வேறு அரசியல் கட்சிகள் இணைந்து, மத்தியில் நிலையான அரசை அமைப்பதற்கு வழிவகுத்தவர். மத்தியில் வாஜ்பாய் தலைமையில் அமைந்த அரசு, பெரும்பான்மை இழந்தபோது, அந்த அரசுக்கு ஆதரவளித்து முக்கிய பங்காற்றிய கருணாநிதியின் செயல்பாடு, இதற்கு சிறந்த உதாரணம்.

மக்களுடன் ஆழமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது எப்படி என்பது குறித்து ஒவ்வொரு அரசியல்வாதியும் கருணாநிதியிடம் கற்றுக்கொள்ள வேண்டும். கவிதை, தமிழ் இலக்கியம், திரைத்துறை ஆகியவற்றிலும் சிறந்து விளங்கினார்.

இத்தகைய சிறப்பு மிக்க மாபெரும் தலைவரின் நினைவு நாணயத்தை வெளியிட வாய்ப்பு அளித்த முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக அமைச்சர் துரைமுருகன் வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் உதயநிதி, கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, எ.வ.வேலு உள்ளிட்ட அமைச்சர்கள், எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி, தயாநிதி மாறன், மாநகராட்சி மேயர் பிரியா, பாமக சட்டப்பேரவை தலைவர் ஜி.கே.மணி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, இந்தியகம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விசிக தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்துகொண்டனர்.

விழாவில், கருணாநிதி பற்றிய சிறப்பு காணொலி திரையிடப்பட்டது. ராஜ்நாத் சிங் கேட்டுக் கொண்டதன் பேரில், விழாவில் பங்கேற்ற அனைவரும் எழுந்து நின்று கருணாநிதிக்கு மரியாதை செலுத்தினர்.

முன்னதாக, நேற்று மாலை கடலோர காவல் படை நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு, மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா, கருணாநிதி நினைவிடங்களுக்கு வந்த ராஜ்நாத் சிங்கை முதல்வர் ஸ்டாலின் வரவேற்றார். பின்னர், முதல்வர் ஸ்டாலின், ராஜ்நாத் சிங், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் மரியாதை செலுத்தினர். கருணாநிதி அருங்காட்சியகத்தை பார்வையிட்டனர். அதில், கருணாநிதியுடன் அமர்ந்திருப்பது போல ராஜ்நாத் சிங் செல்ஃபி எடுத்துக் கொண்டார்.

கருணாநிதிக்கு பிரதமர் மோடி புகழாரம்:

கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவை முன்னிட்டு, பிரதமர் மோடி அனுப்பிய வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது: இந்திய அரசியல், இலக்கியம், சமூகப் பணிகள் என பல்வேறு களங்களில் உயர்ந்து விளங்கிய தலைவராக திகழ்ந்த கருணாநிதி, தமிழக வளர்ச்சியிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் எப்போதும் அக்கறை கொண்டு விளங்கினார். பன்முகத் திறமை கொண்ட அவர், தனது எழுத்துகள் மூலம் தமிழ் மொழி, கலாச்சாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் மக்களால் இன்றும் நினைவுகூரப்படுகின்றன. அவரது இலக்கிய ஆற்றல், அவரது படைப்புகளின் மூலம் பிரகாசித்ததுடன், அவருக்கு ‘கலைஞர்’ என்ற அன்பான பட்டத்தையும் பெற்றுத் தந்துள்ளது.

அவரது கொள்கைகள், அவரது பணிகளை இந்த நாணயம் என்றென்றும் நினைவூட்டும். கருணாநிதி போன்ற தலைவர்களின் தொலைநோக்கு பார்வை, சிந்தனைகள், நம் தேசத்தின் பயணத்தை தொடர்ந்து வடிவமைக்கும். இவ்வாறு பிரதமர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் நன்றி: பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்ததற்கும், நாணய வெளியீட்டு விழா வெற்றி பெற ஆதரவு அளித்ததற்கும் நெஞ்சார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்வதாக சமூக வலைதளத்தில் முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

# ராஜீவ் காந்தியின் 80–வது பிறந்தநாள் : கட்சியினருக்கு தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் அழைப்பு

சென்னை : ஆக. 19

ராஜீவ் காந்தியின் 80 ஆவது பிறந்தநாளான நாளை (ஆகஸ்ட் 20) அனைத்து மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளும் அவரது உருவப் படத்தை வாகனங்களில் அலங்கரித்து முக்கிய வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் சென்று வழிநெடுக அவரது ஆட்சியில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளின் துண்டு பிரசுரத்தை விநியோகிக்க வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “இந்தியாவை 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்வேன் என்று உறுதிபூண்ட ராஜீவ் காந்தி உலகமே வியக்கும் வகையில் ஒப்பற்ற சாதனைகளை நிகழ்த்தினார். தமது 40 ஆவது வயதில் இந்திய நாட்டின் இளைய பிரதமராக பொறுப்பேற்று அவர் நிகழ்த்திய சாதனைகள் ஏராளம்.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் தான் இந்த நாட்டின் வறுமையை விரட்ட உதவும் என்று நம்பியவர். இன்று அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு அன்றே வித்திட்டவர். நாட்டை எதிர்நோக்கியிருந்த பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கு திறந்த மனதுடன் பல முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டவர்.

ஜனநாயகத்தில் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருப்பதை தடுத்து நாடாளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றுக்கு அடுத்த நிலையில் பஞ்சாயத்து



ராஜ், நகர்பாலிகா என்கிற அமைப்புகளை உருவாக்கி மக்கள் பங்கேற்கும் ஜனநாயகத்தை அரசமைப்புச் சட்ட திருத்தத்தின் மூலம் உருவாக்குவதில் வெற்றி கண்டவர். இதன்மூலம் ஜனநாயகத்தை பரவலாக்கினார். இலங்கை தமிழர்களின் 40 ஆண்டுகால பிரச்சினையை தீர்க்க உடன்பாடு கண்டவர்.

இலங்கையில் தமிழர் ஆட்சியை உருவாக்கி, தமிழை அரியணையில் ஏற்றி, தமிழ் தாயகப் பகுதியை உருவாக்கியவர் ராஜீவ் காந்தி. இந்தியாவின் சிறந்த வல்லமைமிக்க பிரதமராக அவர் சுடர்விட்டார். இந்தியாவை பற்றி ராஜீவ் காந்திக்கு நிறைய கனவுகள் இருந்தது. இந்தியாவும், இந்தியர்களும் உலகில் முன்னணியில் இருக்க வேண்டுமென்று ராஜீவ் காந்தி கனவு கண்டார்.

அதற்காக நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார். இந்திய நாட்டின் பிரதமராக ஐந்தாண்டுகளில் தேசிய, சர்வதேச அரங்கில் உலகம் போற்றும் வகையிலே சாதனைகளை படைத்து இந்த நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவராக விளங்கினார்.

தமிழ்நாட்டு மக்களோடு ராஜீவ் காந்தி கொண்டிருந்த நெருக்கமும், அன்பு அளவற்றவை. 1988 ஆம் ஆண்டில் 13 முறை தமிழகத்தில் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிராமம் கிராமமாக அவரே வாகனத்தை ஓட்டிச் சென்று வழிநெடுக மக்களை சந்தித்து அவர்களோடு உரையாடி, அவர்களது பிரச்சினைகளை அறிந்து ஏழை, எளிய மக்கள் மீது அன்பை பொழிந்தவர்.

தமிழ் மக்களின் பாச வெள்ளத்தில் திளைத்தவர். எதிர்கால இந்தியாவுக்கு இன்னும் 50 ஆண்டுகளுக்கு மக்களின் ஆதரவோடு வழிநடத்தக் கூடிய ஆற்றல்படைத்த தலைவராக திகழ்ந்த ராஜீவ் காந்தி, 1991 தேர்தல் பரப்புரை மேற்கொண்ட போது, தமிழ் மண்ணில் ஸ்ரீபெரும்புதூரில் பயங்கரவாத சக்திகளின் சதித் திட்டத்தினால் நயவஞ்சகமாக நம்மிடமிருந்து பறிக்கப்பட்டார். அவரது நினைவை தமிழக மக்களிடமிருந்து எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது.

பாரத ரத்னா ராஜீவ் காந்தியின் 80 ஆவது பிறந்தநாளான நாளை அனைத்து மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளும் அவரது திருவுருவப் படத்தை வாகனங்களில் அலங்கரித்து முக்கிய வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் சென்று வழிநெடுக அவரது ஆட்சியில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளின் துண்டு பிரசுரத்தை விநியோகிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இந்நிகழ்வை மாவட்ட, வட்டார, நகர, பேரூர், கிராமம் என அனைத்து நிலைகளிலும் நடத்தி மறக்கமுடியாத மாபெரும் தலைவர் ராஜீவ் காந்தியின் நினைவை போற்றுவோம்” என்று செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.




# கொல்கத்தா முதுகலை மருத்துவ மாணவி படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து போக்குவரத்து தொழிலாளர்கள் தஞ்சையில் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் : ஆக. 19

கொல்கத்தா ஆர்ஜி கர் அரசு மருத்துவக் கல்லூரியில் முதுகலை பயின்று வரும் மருத்துவ மாணவி உடல் சிதைக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டதை கண்டித்து தஞ்சையில் போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மருத்துவ மாணவி கை கால்களை உடைத்து, வாய் கிழித்து, உடல் சிதைக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டதை வன்மையாக கண்டிக்கின்றோம், குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்து மரண தண்டனை வழங்க வேண்டும், மருத்துவ மாணவியின் கொடூர மரணம் குறித்து உண்மை நிலை அறிய வெள்ளை அறிக்கை விட வேண்டும், மருத்துவ மாணவியின் மரணத்திற்கு நீதி கேட்டு போராடும் மாணவர்கள் மீதான காவல்துறை அடக்குமுறைகளை கைவிட வேண்டும், நாடு முழுவதும் மருத்துவர்கள், செவிலியர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் முழக்கங்களாக எழுப்பப்பட்டது. நேற்று 18. 8.24 ஞாயிறு மதியம் 12 மணிக்கு தஞ்சாவூர் அரசு போக்குவரத்துக் கழகம் ஜெபமாலைபுரம் நகர கிளை முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சிஐடியு மத்திய சங்க தலைவர் டி.காரல்மார்க்ஸ் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் போக்குவரத்து ஏஐடியூசி மாநில துணைத்தலைவர் துரை.மதிவாணன், கும்பகோணம் சங்க பொதுச்செயலாளர் எஸ். தாமரைச்செல்வன், பொருளாளர் சி.ராஜமன்னன், சிஐடியூ மாவட்ட துணை செயலாளர் கே.அன்பு, மக்களைத் தேடி மருத்துவ சங்கத்தின் செயலாளர் சாய் சித்ரா, அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் எஸ். கோதண்டபாணி ஏஐசிசிடியூ மாவட்ட தலைவர் கே. ராஜன், நிர்வாகி ஜெயபால்,கரந்தை புறநகர் சிஐடியு நிர்வாகி ராஜசேகர், அனைத்து சங்க நிர்வாகிகள் கலியமூர்த்தி, தமிழ்மன்னன், மோகன்ராஜ், இளங்கோவன், அரசு விரைவு போக்குவரத்து கழக சங்க நிர்வாகி முருகேசன், விசிறி சாமியார் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்





தஞ்சை மத்திய மாவட்ட மாணவரணி தலைமை-தமிழக வெற்றிக் கழகம் சார்பில் விலையில்லா ரொட்டி, பால், முட்டை வழங்கும் திட்டம் தொடர்ந்து 28 வது வாரம் தஞ்சை மாவட்ட பொறுப்பாளர் விஜய் சரவணண் அறிவுறுத்தலின்படி 50 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இதில் தஞ்சை மாவட்ட மாணவரணி தலைவர் வினோத், மாவட்ட மாணவரணி செயலாளர் விஜய் சரண், மாவட்ட மாணவரணி பொருளாளர் உதயசூரியன், மாவட்ட மாணவரணி து.தலைவர் ராஜ்குமார், மற்றும் மாவட்ட மாநகர மாணவரணி தலைமை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தஞ்சை மாவட்டத்தில் இரண்டாவது முறையாக 8 கி.மீ ஆரோக்கிய நடைபயிற்சி மேற்கொண்ட சத்யா நடைபயிற்சியாளர்கள் சங்கத்தினர்



தஞ்சை : ஆக. 19

தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் துவங்கப்பட்ட நடப்போம் நலம்பெறுவோம் (HEALTH WALK)என்கின்ற 8 கிலோ மீட்டர் தூரம் ஆரோக்கிய நடைபயிற்சி திட்டத்தினை தொடரும் வகையில், தஞ்சை சத்தியா விளையாட்டு திடல் நடைபயிற்சியாளர் சங்கம் சார்பில், இரண்டாவது முறையாக இன்று காலை 8 கிலோ மீட்டர் தூர நடைபயிற்சி நடைபெற்றது....

முன்னதாக இந்நிகழ்ச்சியை சத்தியா விளையாட்டு திடல் நடைபயிற்சியாளர் சங்க தலைவர் சீனிவாசன் துவக்கிவைத்தார்.. சங்கத்தின் செயலாளர் ஜெயக்குமார், பொருளாளர் பார்த்தசாரதி, துணை தலைவர் கண்ணாடி குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலையில் துவங்கிய நடைபயிற்சி புதியபேருந்து நிலையம் வரை சென்று, மீண்டும் அதே வழியாக சத்யா விளையாட்டு திடலை வந்தடைந்தது.. இதில் 94 க்கும் மேற்பட்ட நடைபயிற்சியாளர்கள், மாணவர்கள், மகளிர் பங்கேற்று 8 கிலோ மீட்டர் தூரத்தை 80 நிமிடங்களில் நடந்தனர். நிறைவாக உடல்நலம், மனநலத்தை காக்கும் நடைபயிற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றியும், வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது...

தொடர்ந்து நடைபயிற்சி மேற்கொள்வோம் நலமுடன் வாழ்வோம் என்ற வாசகத்திற்கு இணங்க தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து நடைப்பயிற்சியாளர்களும் ஒன்றிணைந்து வாரம் ஒரு முறை இந்த பயிற்சியினையும் முயற்சியினையும் தொடர்ந்து செய்வோம் என உறுதிமொழி ஏற்கொண்டனர்.

### உழவர் காவலர் என் எஸ் பழனிச்சாமியின் நினைவு மணிமண்டபத்தில்

# அரசு சார்பில் மரியாதை செலுத்த தமிழக அரசுக்கு கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் டி ஆர் ஈஸ்வரன் கோரிக்கை



பல்லடம் : ஆக. 19

பல்லடம் அருகே நாதகவுண்டன்பாளையத்தில் புதிதாக திறக்கப்பட உள்ள கிணத்துக்கடவு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க தலைவருமான என்.எஸ். பழனிச்சாமி அவர்களின் மணிமண்டபத்தில் அவரது திருவுருவ சிலைக்கு மரியாதை செலுத்திய பின் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன் செய்தியாளர்களை சந்தித்தார்...

அவர் பேசியதாவது..

தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளுக்கு பரிச்சியமாகி அனைத்து விவசாயிகளுக்குமான தலைவராக இருந்தவர் என்.எஸ்.பழனிச்சாமி அவர்கள்... இலவச மின்சார போராடடத்தில் அவருக்கு முக்கிய பங்குண்டு... அரசியல் அங்கீகாரம் பெற்று சட்டமன்றத்துக்குள் சட்டமன்ற உறுப்பினராக உள்ளே சென்று விவசாயிகளுக்காக அந்த வாய்ப்பை பயன்படுத்தியவர்.. அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது டாஸ்மாக் பாட்டில்களை விவசாய நிலத்தில் வீசுவதால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாக முதன்முதலாக குரல் கொடுத்தவர்...

அவரது ஆலோசனையை தான் தற்போது தமிழக அரசு செயல்படுத்தி உள்ளது... டாஸ்மாக் பாட்டில்களை திரும்ப பெறும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது...

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை இரட்டிப்பாக்க ரேசன் கடைகளில் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்ய வேண்டும் என முதன்முதலாக குரல் கொடுத்தவர் என.எஸ். பழனிச்சாமி... விவசாயிகளின் வருமானத்தைத் இரட்டிப்பாக்க கள் இறக்குவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என குரல் கொடுத்தவர் என். எஸ்.பழனிச்சாமி அவர்கள் பல கட்சிகளும் என்னுடன் சேர்ந்து கள் இறக்க அனுமதி கேட்டு சட்டமன்றத்தில் பேச ஆரம்பித்துள்ளனர்.. நிச்சயம் என்.எஸ்.பழனிச்சாமி அவர்கள் கண்ட கனவு நனவாகும்.. உழவர்களுக்காகவே உழைத்த என்.எஸ்.பழனிச்சாமி அவர்களை நாட்டுக்கு அடையாளப்பட்டுத்த பட வேண்டும்...அதற்கு இந்த மணிமண்டபம் துணையாக இருக்கும் விவசாயிகளுக்காகவே வாழ்ந்து மறைந்த என்.எஸ். பழனிச்சாமி அவர்களுக்காக கட்டப்பட்டுள்ள இந்த மணிமண்டபத்தில் தமிழக அரசு சார்பில் மாரியாதை செலுத்த வேண்டும்...

இந்த கோரிக்கை தமிழக முதல்வர் பரிசீலனை செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்...

# தஞ்சையில் கூட்டு வன்கொடுமை: பெண் எஸ்.ஐ. மாற்றம்



தஞ்சாவூர் : ஆக. 19

தஞ்சை மாவட்டத்தில் பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இதனையடுத்து பாப்பாநாடு காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றபோது, அவரை மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க பெண் போலீஸ் எஸ்.ஐ கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அந்த பெண்ணுக்கு உடனடி சட்ட உதவி வழங்காமல் அலைக்கழிக்க செய்ததாக குற்றசாட்டு எழுந்தது. இந்நிலையில் பாப்பாநாடு பெண் எஸ்.ஐ சூர்யாவைஆயுதப்படைக்கு மாற்றி தஞ்சை எஸ். பி ஆஷிஸ் ராவத் உத்தரவிட்டுள்ளார்.

### தஞ்சையில் பல குற்றவழக்குகள் மற்றும்

# கஞ்சா வழக்கில் தேடப்பட்டு வந்த இரு வாலிபர்கள் கைது



தஞ்சாவூர் : ஆக. 19

தஞ்சை காவல் கண்காணிப்பாளர் ஆசிஸ் ராவத் உத்தரவின் பெயரில், தஞ்சை நகர துணை காவல் கண்காணிப்பாளர் ராஜா மேற்பார்வையில், தஞ்சை மேற்கு காவல் நிலையத்தின் முன்னாள் காவல் ஆய்வாளர் சோமசுந்தரம் மற்றும் தஞ்சை கிழக்கு காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் மற்றும் தற்சமயம் தஞ்சை மேற்கு காவல் நிலையத்தின் பொறுப்பு ஆய்வாளராக சுப்பிரமணியன் முன்னிலையில், பல குற்ற வழக்குகள் மற்றும் கஞ்சா வழக்குகளில் தேடப்பட்டு வந்த ரெட்டிபாளையம் ரோடு காந்திபுரத்தைச் சேர்ந்த சன்டாஅஜித் மற்றும் கள்ளபெரம்பூர் பகுதியை சேர்ந்த ரவுடி டியூக் சூர்யா இருவரையும், இன்று அதிகாலை கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சேலம் ஆத்தூரில் சுற்றி வளைத்தனர்,

அப்போது இரு குற்றவாளிகளும் தப்பிச்செல்ல முயற்சித்தனர் விடாமல் அவர்களை துரத்திச் சென்று கைது செய்தனர். மேலும் சிறப்பாக பணியாற்றியதற்கு தஞ்சை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆசிஸ் ராவத் வெகுவாக பாராட்டினார்.

### திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் அருகே உள்ள பிரச்சனைக்குரிய

# கணியூர் – காரத்தொழுவு நெடுஞ்சாலை பகுதியில் மடத்துக்குளம் ஒன்றிய அதிகாரிகள் திடீர் ஆய்வு



மடத்துக்குளம் : ஆக. 19

மடத்துக்குளம் பகுதியில் உள்ள கணியூர் - காரத்தொழுவு நெடுஞ்சாலைப்பகுதியில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான கனரக வாகனங்கள், அரசு பேருந்துகள், அதிகளவில் கடந்து செல்கின்றன. இந்நிலையில் கடந்த பல மாதங்களாக கணியூர் - ஜோத்தம்பட்டி, பேருராட்சி பகுதியில் இருந்து வழிந்து வரும் சாக்கடை கழிவு நீர் அருகே உள்ள மெயின் ரோட்டில் வழிந்து, செல்வதால், இப்பகுதியில் செல்லும் வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள், பொதுமக்களுக்கு, பல்வேறு நோய் தொற்றுகள் ஏற்படுவதாக கூறி பல்வேறு கட்சிகளும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் தொடர்ந்து பிரச்சனையாக இருந்து வரும் கணியூர் - காரத்தொழுவு மெயின்ரோடு பகுதியில் நேற்று முன்தினம் பலத்த கனமழை பெய்துள்ள காரணத்தால், சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள சாக்கடை கால்வாயில் உள்ள கழிவு நீர், கனமழை காரணமாக அடித்து வரப்பட்டு, அருகே உள்ள மெயின் ரோட்டில் அதிக அளவில் சென்ற காரணத்தால், இவ்வழியாக சென்ற வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர்.

மேலும் சாக்கடை கழிவுநீர் சாலையில் செல்லும் காரணத்தால், அருகே உள்ள வணிக கடைக்காரர்கள், துர்நாற்றம் தாங்காமல் தங்களது விற்பனை பாதிக்கப்படுவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

இதனை தொடர்ந்து நீடித்து வரும் இப்பிரச்சனைக்கு, தீர்வு காண, சம்பந்தப்பட்ட மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ரங்கநாதன், மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் நேரில் வந்து இடத்தை ஆய்வு செய்தனர்.

இதனையடுத்து கணியூர் - ஜோத்தம்பட்டி பகுதியின் துப்புரவு பணியாளர்களை கொண்டு உடனடியாக தேங்கி கிடந்த சாக்கடை கால்வாய்கள் தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டது. இந்த ஆய்வின் போது, உடன் கணியூர் பேருராட்சி தலைவர் செந்தமிழ்செல்வி பத்மநாபன், கணியூர் திமுக பேரூராட்சி செயலாளர் பாலகிருஷ்ணன், அதிமுக பேருராட்சி செயலாளர் சரவணன், சமூக ஆர்வலர் காடம்பரி, குமார், கம்யூனிஸ்ட் கட்சியினர், ஜோத்தம்பட்டி ஊராட்சி செயலாளர் வைரமுத்து, வார்டு உறுப்பினர் வெங்கடாச்சலம், ஆகியோர் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு வீடியோ போட்டோகிராஃபர்ஸ் அசோசியேசன் தஞ்சை மாவட்ட செயற்குழு கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. சங்கச் செயலாளர் சுரேஷ் சங்க பொருளாளர் பாலமுருகன் முன்னிலை வைத்தனர் சங்க துணை தலைவர் செந்தில் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில சங்கம் வழங்கிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும் வரும் டிசம்பர் மாதம் நடைபெற இருக்கின்ற தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேஷன் சார்பில் நடைபெற இருக்கின்ற டிஜி மீடியா விளம்பர பதாகை வழங்கப்பட்டது. கூட்டத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட பொதுக்குழு கூட்டத்தை விரைவில் நடத்த வேண் ~ம், மாநில சங்கம் நடத்துகின்ற டிஜி மீடியாவில் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும், உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முன்னாள் மாவட்ட பொருளாளர் சிவகுமார், மாவட்ட பொறுப்பாளர்கள் சுகுமாரன் வரதன் கௌதமன், பாஸ்கர், நவீன், மூவி முத்துக்குமார், காந்தி வெற்றி வேலன், ஆனந்த், சுரேஷ்பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர்



திருவள்ளூர் மாவட்டம்,பொன்னேரி வட்டம் வருவாய் துறை சார்பில் சின்னம்பேடு கிராம உதவியாளர் ஆர். வரதராஜனுக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் சிறந்த பணியாளருக்கான விருதை மாவட்ட கலெக்டர் பிரபு சங்கர் வழங்கினார். அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், வருவாய் அலுவலர் ராஜ்குமார்,பொன்னேரி சார் ஆட்சியர் வாகே சங்கேத் பல்வந்த் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# கொல்கத்தா முதுகலை மருத்துவ மாணவி படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து போக்குவரத்து தொழிலாளர்கள் தஞ்சையில் ஆர்ப்பாட்டம்




தஞ்சாவூர: ஆக. 19

கொல்கத்தா ஆர்ஜி கர் அரசு மருத்துவக் கல்லூரியில் முதுகலை பயின்று வரும் மருத்துவ மாணவி உடல் சிதைக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டதை கண்டித்து தஞ்சையில் போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மருத்துவ மாணவி கை கால்களை உடைத்து, வாய் கிழித்து, உடல் சிதைக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டதை வன்மையாக கண்டிக்கின்றோம், குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்து மரண தண்டனை வழங்க வேண்டும், மருத்துவ மாணவியின் கொடூர மரணம் குறித்து உண்மை நிலை அறிய வெள்ளை அறிக்கை விட வேண்டும், மருத்துவ மாணவியின் மரணத்திற்கு நீதி கேட்டு போராடும் மாணவர்கள் மீதான காவல்துறை அடக்குமுறைகளை கைவிட வேண்டும், நாடு முழுவதும் மருத்துவர்கள், செவிலியர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் முழக்கங்களாக எழுப்பப்பட்டது.

நேற்று 18. 8.24 ஞாயிறு மதியம் 12 மணிக்கு தஞ்சாவூர் அரசு போக்குவரத்துக் கழகம் ஜெபமாலைபுரம் நகர கிளை முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சிஐடியூ மத்திய சங்க தலைவர் டி.காரல்மார்க்ஸ் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் போக்குவரத்து ஏஐடியூசி மாநில துணைத்தலைவர் துரை.மதிவாணன், கும்பகோணம் சங்க பொதுச்செயலாளர் எஸ். தாமரைச்செல்வன், பொருளாளர் சி.ராஜமன்னன், சிஐடியூ மாவட்ட துணை செயலாளர் கே.அன்பு, மக்களைத் தேடி மருத்துவ சங்கத்தின் செயலாளர் சாய் சித்ரா, அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் எஸ். கோதண்டபாணி ஏ ஐ சி சி டி யூ மாவட்ட தலைவர் கே. ராஜன், நிர்வாகி ஜெயபால்,கரந்தை புறநகர் சிஐடியு நிர்வாகி ராஜசேகர், அனைத்து சங்க நிர்வாகிகள் கலியமூர்த்தி, தமிழ்மன்னன், மோகன்ராஜ், இளங்கோவன், அரசு விரைவு போக்குவரத்து கழக சங்க நிர்வாகி முருகேசன், விசிறி சாமியார் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்



*2026 இல் அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் ஆனைமலை நல்லாறு திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும்*

# கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தின் தலைவர் N.S.பழனிச்சாமி நினைவு மணிமண்டபம் திறப்பு விழாவில் எடப்பாடி பழனிச்சாமி பேச்சு





திருப்பூர் : ஆக. 19

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே நாதகவுண்டன்பாளையத்தில் கிணத்துக்கடவு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க தலைவருமான என்.எஸ். பழனிச்சாமி அவர்களின் 82 வது பிறந்தநாள் விழா மற்றும் நினைவு மணிமண்டபம் திறப்பு விழா இன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏர்முனை இளைஞர் அணி தலைவர் NSP வெற்றி தலைமையில் முன்னாள் முதல்வரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கலந்து கொண்டு நினைவு மணிமண்டபத்தையும், மணிமண்டப பெயர் பலகையையும் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, எம்.எஸ்.எம்.ஆனந்தன், செங்கோட்டையன், சே.மா.வேலுச்சாமி, உடுமலை ராதாகிருஷ்ணன், முக்கிய விவசாய சங்க தலைவர்கள் பலர் கலந்து கொண்டு என்.எஸ்.பழனிச்சாமி அவர்களின் நினைவு மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மேடையில் பேசிய முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, அத்திகடவு அவிநாசி திட்டம் முழுமையாக அதிமுக விற்கு சொந்தமானது... யார் வேண்டுமென்றாலும் சீன் போடலாம் அம்மா நினைத்தார் அதை எடப்பாடியார் செய்து காட்டியுள்ளார்.

அதிமுக ஆட்சியில் 90% வேலையை முடித்து வைத்திருந்தோம்...மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால் மூன்றே மாதத்தில் அத்திக்கடவு அவிநாசி திட்டத்தை தொடங்கி இருப்போம். அத்திக்கடவு அவிநாசி திட்டம் இரண்டை முடிந்தால் தற்போதைய ஆட்சியாளர்கள் செய்து காட்டட்டும்... அதே போன்று ஆனைமலையாறு நல்லாறு திட்டத்தை நிறைவேற்ற கேரளா முதல்வரிடம் பேசி திட்டத்தை செயல்படுத்துவதற்கான முன்னெடுத்தோம்... 2026ல் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் ஆனைமலையாறு நல்லாறு திட்டத்தை நிச்சயம் நிறைவேற்றுவோம் என பேசினார்.

தொடர்ந்துபேசிய அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பேசுகையில், மரியாதைக்குரிய NSP அவர்கள் உழவர் நலனுக்காகவே வாழ்நாள் முழுவதும் உழைத்து மறைந்த NS பழனிச்சாமி அவர்களின் நினைவு மணிமண்டபத்தை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மணிமண்டபம் கட்ட உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்..

கலைஞர் அவர்களின் 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் கொந்தளிப்புடன் போராட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில் கோவையில் ஜூலை 5 ஆம் தேதி மிக சிறப்பான போராட்டத்தை நடத்தி காட்டியவர். விவசாய கடன் தள்ளுபடி, உழவர் சந்தை பிரச்சனை, என விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக போராடியவர் என்.எஸ். பழனிச்சாமி அவர்கள். கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினராக என்.எஸ். பழனிச்சாமி இருந்தபஃது உழவர் பெருமக்களின் பிரச்சினைகளை சட்டமன்றத்தில் ஒலிக்கச் செய்தவர். நானும் அவரோடு சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியதை மிக பெருமையாக கருதுகிறேன்.

விவசாயிகளுக்காக உழைத்தவர் அய்யா நாராயணசாமி நாயுடு அவர்கள். அவரது நினைவு மண்டபத்தை திறந்து வைத்த போது எனக்கு ரேக்ளா வண்டியும் இரண்டு காளைகளையும் பரிசாக வழங்கினார்கள். இன்று அவரது நினைவு மணிமண்டபம் திறப்பு விழாவில் பங்கேற்ற எனக்கு 5 மாத காளை கன்றை பரிசாக வழங்கியுள்ளனர். அதிமுக ஆட்சி தான் விவசாயிகளுக்கு பொற்கால ஆட்சி நானும் விவசாயி தான். எந்த தொழிலையும் செய்துவிடலாம்...ஆனால் விவசாயம் செய்பவய்களுக்கு தான் அது தெரியும். விவசாயிகளின் துயரைத்தை உணர்வுபூர்வமாக அறிந்தவன் நான். புரட்சி தலைவி அம்மா இருக்கும் போது கோவை திருப்பூர் ஈரோடு மாவட்ட மக்களின் வறட்சியை போக்க நிரந்தர தீர்வை காண நினைத்தார்கள்.

60 ஆண்டுகளுக்கு முன்பு அத்திக்கடவு அவிநாசி திட்டத்தை அறிவித்தார்கள். அம்மா மறைவிற்கு பிறகு நான் முதல்வராக பதவியேற்றதும் மாநில நிதியில் இருந்து சுமார் 1600 கோடி செலவில் திட்டத்தை 90 சதவிகிதம் பணிகளை நிறைவேற்றினோம். கொரோனா தொற்று ,ஆட்சி மாற்றத்திற்கு பிறகு திமுக ஆட்சியில் திட்டத்தை கிடப்பில் போட்டனர். இரண்டு ஆண்டுக்கு முன்பாகவே திட்டத்தை துவங்கியிருந்தால் நிலத்தடி நீர் பெருகி இருக்கும், விவசாயிகள் பயன் பெற்றிருப்பார்கள். காவிரி குண்டாறு திட்டம் 160000 கோடி புதுக்கோட்டையில் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கினேன். அதையும் கிடப்பில் போட்டு விட்டார்கள். காவிரியில் தடுப்பணை அமைத்து 450 கோடியில் கட்டும் பணியை தொடங்கினோம். கரூர் அருகே பூலூர் பகுதியில் 450 கோடி மதிப்பில் கட்டினோம். அதையும் கிடப்பில் போட்டு விட்டார்கள்.

அதிமுக ஆட்சி வந்திருந்தால் அணைகள் கட்டப்பட்டிருக்கும் ஒரு சொட்டு தண்ணீர் கூட வீணாகாமல் இருக்க ஓடையிலும் ஆறுகளிலும் தடுப்பணை கட்டினோம். கடும் வறட்சியில் விவசாய சங்க தலைவர்கள் கோரிக்கை படி தமிழ்நாட்டில் முதல் முறையாக 2400 கோடி வறட்சி நிவாரணம் வழங்கினோம். இந்தியாவிலேயே 9400 கோடி ரூபாய் பயிர் காப்பீடு செய்து கொடுத்தது அதிமுக அரசு. குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதாக கூறி ஸ்டாலின் தண்ணீர் திறந்து விட்டார். மேட்டூரில் தண்ணீர் வற்றிவிட்டது. குறுவை முழுவதுமாக காய்ந்து விட்டது. குறுவை பயிர் காப்பீடு திட்டத்தில் இணைக்கப்படாததால் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகளாக இழப்பீடு கிடைக்கவில்லை. பயிர் கடன் 12110 கோடி தள்ளுபடி செய்த அரசு அதிமுக அரசு. ஆனைமலை நல்லாறு திட்டத்தை நிறைவேற்ற கேரளா சென்று முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம். கோரிக்கையை பரிசீலனை செய்வதாக சொன்னார். திமுக அரசு ஆனைமலை நல்லாறு திட்டத்தை நிறைவேற்ற திமுக அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. 2026 ஆம் ஆண்டு அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஆனைமலை நல்லாறு திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும் என் பேசினார்.

விழாவின் முடிவில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு ஒளிப்பதிவாளரும் ஏர்முனை இளைஞர் அணி தலைவர் மாற என் எஸ் வெற்றி ஐந்து மாத காளை கன்றை பரிசாக வழங்கினார்.

# இயற்கை முறையில் மீனோ அமிலம் பற்றி வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன் செயல்முறை விளக்கம்



திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் வட்டம் அட்மா திட்டத்தின் கீழ் பன்றிமலை இயற்கை விவசாயி தாமரைநாதன் தோட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரமோகன் அவர்கள் அறிவுரையின் படி இயற்கை முறையில் மீனோ அமிலம் தயாரிப்பது பற்றி விவசாயிக்கு செயல் விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது . அவருடன் பக்கத்து தோட்ட விவசாயிகளும் கலந்து கொண்டு மீனோ அமிலம் தயாரிக்கும் செயல் விளக்கத்தினை தெரிந்து கொண்டனர். அதன் செய்முறையினை எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய முதுநிலை ஆராய்சியாளர் செல்வமுகிலன் செயல் விளக்கமாக செய்து காண்பித்தார். இந்நிகழ்ச்சியில் உதவி தோட்டக்கலை அலுவலர் சக்திவேல் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு அருண்குமார் மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பூரில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம்





திருப்பூர்,ஆக.19-

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிசார்பில் திருப்பூர் வடக்கு சட்டமன்றத்திற்கு உட்பட்ட சாமுண்டிபுரம் பேருந்து நிலையத்திலும், திருப்பூர் தெற்கு சட்டமன்றத்திற்கு உட்பட்ட காங்கேயம் ரோடு, ராக்கியாபாளையம் பிரிவு சிக்னல் அருகில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் திருப்பூர் மாநகர் மாவட்ட தலைவர் எஸ்.ரவிக்குமார் வழிகாட்டுதலின் பேரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநில சிறப்பு அழைப்பாளர்கள் சிவசுப்பரமணியம் செழியன் MC, ஜெயா முத்துசாமி முன்னாள் mc, மாநில கொள்கை பரப்பு செயலாளர் வீ.தனசேகரன், சிறுபான்மை பிரிவு கொங்கு மண்டல பொறுப்பாளர் பி.எஸ்.கே. அபுல் கலாம் ஆசாத் ஆகியோர் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் படிவத்தை மாநகர் மாவட்ட பொது செயலாளர்கள் சே.பூபதி அவர்களும் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் படிவத்தை கே.ரகுநாதன் அவர்களும் பெற்றுக் கொண்டனர். நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் ஈஸ்வரமூர்த்தி, முருகேஷ், சேதுராமன், மணிகண்டன், ராசு கருப்பையா, சாம் அமிர்த பாபு, செல்வராஜ், டைலர் ரவி, இளைஞர் அணி கோவிந்தராஜ், நஜ்முதீன், காளீஸ், மகளிர் அணி ஷர்மிளா, கலாமணி, டிவிஷன் தலைவர்கள் நடராஜ், கண்ணன், மாயழகு கீர்த்தி, சுப்பிரமணி, பாபு பாலாஜி, கணேஷ், ஜோதிலிங்கம், சண்முகம், ஆபீஸ் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உடுமலை அருகே பள்ளியில் 8 மாநில உணவுத் திருவிழா





திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே பள்ளபாளையம் வேதவியாஸ் வால்டார்ப் பள்ளியில் டேஸ்ட் ஆப் பாரத் மூலம் இந்திய வண்டி உணவு பண்டிகை திருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது. எட்டு மாநிலங்களில் உள்ள பாரம்பரிய உணவு பதார்த்தங்களை தயாரித்து பெற்றோர்களுக்கு வழங்கினார். இந்திய திரு நாட்டின் பன்முக கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் பல்வேறு உணவு வகைகளை குழந்தைகள் கற்று அனைவருக்கும் சுவையாக தயாரித்து கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலைநிறுத்தம் வாபஸ் : 8 நாட்களுக்கு பிறகு கடலுக்குச் சென்ற பாம்பன் நாட்டுப் படகு மீனவர்கள்

ராமேசுவரம் : ஆக. 19

பாம்பன் நாட்டுப் படகு மீனவர்கள் 8 நாட்களுக்கு பிறகு நேற்று கடலுக்குச் சென்றனர்.

பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற அலெக்ஸ், ரஞ்சன், சார்லஸ், சூசை மார்டின் ஆகியோருக்கு சொந்தமான நான்கு நாட்டுப் படகுகளை கைப்பற்றி அதிலிருந்த 35 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கடந்த ஆகஸ்ட் 08 அன்று கைது செய்தனர்.

35 மீனவர்கள் மீதும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஆகஸ்ட் 22 வரை வரையிலும் நீதிமன்ற காவலில் புத்தளத்தில் உள்ள வாரியாபொல சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி பாம்பனில் நாட்டுப்படகு மீனவர்கள் கடந்த ஆகஸ்ட் 10லிருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பாம்பன் பாலம் அருகே சாலை மறியல் போராட்டமும் அறிவித்திருந்தனர்.

இதனை தொடர்ந்து ராமேசுவரம் வட்டாட்சியர், மீன்வளத்துறை துணை இயக்குநர் தலைமையில் பாம்பன்மீனவர் சங்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி, அரசு தரப்பில் மீனவர்களின் பிரச்சினைகளை தீர்த்திட விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்ததை தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தையும், பாம்பன் பாலம் சாலை மறியல் போராட்டத்தையும் வாபஸ் பெற்றனர். இந்நிலையில் நேற்று எட்டு நாட்களுக்கு பிறகு பாம்பனிலிருந்து சுமார் 150க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

*மருத்துவ முதுகலை மருத்துவ மாணவி கொடூர கொலையை கண்டித்து*

# தஞ்சை மருத்துவ மாணவ– மாணவியர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி எதிர்ப்பை தெரிவித்தனர்



தஞ்சாவூர் : ஆக. 19

கல்கத்தா ஆர்ஜி கர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதுகலை பயிற்சி மருத்துவர் கல்லூரியில் கொடூர தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, கை, கால், தொண்டை சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த கொடூர மரணத்தை கண்டித்து இந்தியா முழுவதும் மருத்துவ மாணவர்கள் போராடிவருகின்றனர்.

தமிழ்நாடு அளவிலும் பெரும்பாலான மருத்துவக் கல்லூரிகளில் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக தஞ்சை மருத்துவக் கல்லூரி மாணவ மாணவியர்கள் நேற்று மாலை 6 மணிக்கு மருத்துவ கல்லூரி வளாகத்தில் ஒன்றுக்கூடி மெழுகுவர்த்தி ஏற்றி எதிர்பையும், போராடும் மருத்துவர்களுக்கு ஆதாரவையும் தெரிவித்தனர்.

இதில் மருத்துவர்கள் மட்டுமல்ல அனைத்து பெண்களின் மீதான அத்து மீறல்கள் தடுக்கப்பட வேண்டும், பாதுகாப்பு வேண்டும், மருத்துவ மாணவர்களுக்கு மாநில அளவில் நலவாரியம் அமைக்கப்பட வேண்டும், கொல்கத்தாவில் மாணவர்கள் மீதான காவல் வன்முறை தடுக்கப்பட வேண்டும், மருத்துவர்கள் பாதுகாப்புக்கு தற்போது சட்டங்கள் இருந்தாலும் கூடுதல் அதிகாரம் அளிக்கின்ற சட்டம் இயற்றப்பட வேண்டும், கொடூரமாக கொலை செய்யப்பட்ட முதுகலை பயிற்சி மருத்துவர் மரணத்திற்கு நீதி வேண்டும் என்ற அட்டைகளை கையில் ஏந்தி மாணவ மாணவியர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

TNTAM 24702

தமிழக எக்ஸ்பிரஸ் நியூஸ்

காலை நாளிதழ்

TAMILAGA EXPERESS NEWS

தமிழகம் முழுவதும் வெளிவந்து கொண்டிருக்கும் தமிழக எஸ்பிரஸ் நியூஸ் நாளிதழுக்கு செய்தி ஆசிரியர், துணை ஆசிரியர், மாவட்ட நிருபர்கள், புகைப்பட கலஞர்கள், தாலுகா நிருபர்கள் மற்றும் விளம்பர ஏஜெண்டுகள் தேவை

தமிழ்நாடு முழுவதும் மாவட்ட வாரியாக பத்திரிகை துறையில் பணியாற்ற ஆர்வமும், சமூக நற்சிந்தனையும் துடிப்புமிக்க இளைஞர்கள் தேவை

ப.ஹரிஹரன்

ஆசிரியர் & வெளியீட்டாளர்

தங்களது முழுவிவரங்களையும் கீழ்கண்ட E-Mail மற்றும் WhatsApp எண்ணிற்கு அனுப்பவும்.

82200 85997 tamilagaexpressnews@gmail.com

நிர்வாக ஆசிரியர் P.கோவிந்தராஜ் Cell: 9842222726

Admin Office : No.25, Flat No:2, Jaisri Towers, Alagiri nagar, 1st street, Vadapalani, Chennai-600 026.

# தமிழ்நாடு கார் வியாபாரிகள் மற்றும் ஆலோசகர் நல மாநில கூட்டமைப்பின் திருப்பூர் மாவட்ட 7–ம் ஆண்டு பொதுக்குழு மற்றும் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா





திருப்பூர்,ஆக.19-

தமிழ்நாடு கார் வியாபாரிகள் மற்றும் ஆலோசகர் நல மாநில கூட்டமைப்பின் திருப்பூர் மாவட்ட 7-ம் ஆண்டு பொதுக்குழு மற்றும் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நேற்று திருப்பூர், கணியாம் பூண்டியில் உள்ள பில்டர்ஸ் சென்டரில் நடைபெற்றது. விழாவிற்கு மாநிலத்தலைவரும் ஒருங்கிணைப்பாளருமான பி.எஸ்.சிவக்குமார் தலைமை தாங்கினார்.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் பாலசுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

அதனை தொடர்ந்து தமிழ்நாடு கார் வியாபாரிகள் மற்றும் ஆலோசகர் நல மாநில கூட்டமைப்பின் சார்பில் கோரிக்கை வைத்தனர்.

அதில் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் இருந்து ஆர்.சி. புக் தபாலில் அனுப்புவது குறித்து. காலதாமதம் தபால் துறை மூலமாக ஆர்.சி. புக் பெறுவதும் இது வியாபாரிக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் ஆர்.சி.புக் உன்னிடம் வண்டி வாங்கும் பொழுது வாகனத்தை வாங்கும் பொழுது அவர்களுக்கு உண்டான தொகை செட்டில்மெண்ட் செய்து ஆர்.சி. புக் டியோ செட் இன்சூரன்ஸ் மற்றும் ஹெச்.பி. கேன்சலுக்கான கடிதம் அனைத்தையும் பெற்றுக் கொள்கிறோம் அதன் பிறகு அதற்குண்டான வேலைபாடுகளை ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் கொடுத்து வியாபாரிகளை சரி செய்து கொள்கிறோம். ஆனால் அந்த நடைமுறை மாற்றி இப்பொழுது ஆர்.சி. ஓனருக்கு ஆர்.சி. புக் அனுப்பி வைக்கும் பொழுது இது ஒரு கட்டப்பஞ்சாயத்து போல் நடக்கிறது. ஆர்.சி. ஓனர் ஆர்.சி. புக்கை வைத்துக்கொண்டு வியாபாரியிடம் பணத்தையும் பெற்றுக் கொண்டு புக்கு ஆர்.சி.புக் வேண்டும் என்றால் பேரம் பேசுகிறார்கள். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு இந்த கடந்த ஆறு மாதமாக நாங்கள் ஆளாயிருக்கிறோம்.

தமிழக முழுவதும் 17 பேர் வியாபாரிகள் இருக்கிறோம். தமிழ்நாடு கார் வியாபாரிகள் மற்றும் ஆலோசகர் நல மாநில கூட்டமைப்பில் இது சம்பந்தமாக முன்பிருந்த போக்குவரத்து ஆணையாளரை அவர்களை சந்தித்து பல தடவை மனு கொடுத்திருக்கிறோம். அதேபோல் மதிப்பிற்குரிய போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து மனு கொடுத்திருக்கிறோம். திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்களின் நேரில் பேசி இந்த விழாவின் வாயிலாக எங்களுடைய வியாபாரியினுடைய சிக்கலான பிரச்சனைகளுக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் அணுகி தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

மாநில முதுநிலைத்தலைவர் ஐ.ஏ.ஜி.துரை, பொருளாளர் சின்னச்சாமி, மாநில முதன்மை துணைத்தலைவர் பால.மயில்வாகனன், காஜா முகமது, மாநில கூடுதல் செயலாளர் தனபாலன், மாநில செய்தி தொடர்பாளர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்பூர் மாவட்ட தலைவர் விஸ்வநாதன், செயலாளர் வாசுதேவன், பொருளாளர் சீதாராமன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு தொடர்பாக சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அரசு முதன்மை செயலாளர்

# டாக்டர் பி.சந்திர மோகன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி முன்னிலையில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நடைபெற்றது

**திண்டுக்கல்** : ஆக. 19

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு தொடர்பாக அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன் தலைமையில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, முன்னிலையில் திண்டுக்கல் மாவட்டம், பழனியில் அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி கூட்டரங்கில் நேற்று (17.08.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் 24.08.2024 மற்றும் 25.08.2024 ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளது. ஆன்மிக ஈடுபாடு உள்ளவர்களும், முருக பக்தர்களும் உலகளவில் உள்ள முத்தமிழ் அறிஞர்களும் மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர். ஆகயால் தமிழக அரசின் சார்பில் அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு மாநாடு சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கபடுவதால் 10 இடங்களில் உணவு வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது தூய்மையினை பராமரித்திட பழனி நகராட்சியின் சார்பில் 200 இடங்களில் குப்பை சேகரிக்கும் தொட்டி வைக்கப்பட்டும், சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பணியாற்றும் வகையில் தூய்மை பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். உணவு கூடங்கள் மற்றும் பொது இடங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பழனி நகராட்சி பகுதியில் சாலைகள் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது. விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. பேரூராட்சி பகுதியில் உள்ள இணைப்பு சாலைகளில் அறிவிப்பு பலகைகள் மற்றும் மின்விளக்கு பொருத்தப்பட்டுள்ளன. குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பற்றாக்குறையின்றி போதுமான அளவில் குடிநீர் வழங்கப்படவுள்ளன. மாநாடு நடைபெறும் சமையத்தில் 17 இடங்களில் பொது சுகாதாரத்துறையின் மூலம் மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளன. சுழற்சி முறையில் 34 குழுக்கள் பணியாற்றவுள்ளன. 14 இடங்களில் அவசர ஊர்திகள் (AMBU-LANCE) தயார்நிலையில் வைக்கப்படவுள்ளது. பொது சுகாதாரத்துறையின் மூலம் உணவு கூடங்களை கண்காணித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு அலுவலர்கள் அனைத்து உணவு விடுதிகளையும் ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநாட்டு பகுதிகளில் 6 இடங்களில் உணவு தாயர் செய்யும் பணிகள் நடைபெறவுள்ளன. இவற்றில் 6 இடங்களில் சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான முறையில் உணவு தயார் செய்யபடுவதை ஆய்வு செய்து தரமான உணவு வழங்குவதை உறுதிப்படுத்திட உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலைப்பணிகளை முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தபட்டுள்ளது. பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் தீயணைப்பு வாகனம் நிறுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. விழா நடைபெறும் இடம், அரங்குகள், பந்தல், மேடை ஆகியவற்றினை பரிசோதித்து அதன் நிலைத்தன்மை குறித்து பொதுபணித்துறையினர் சான்றிதழ் வழங்கிடவும், பொதுப்பணித்துறை மின்த்துறை பணியாளர்கள் தேவையான இடங்களை பரிசோதித்து, அதன் நிலைத்தன்மை குறித்தும், அதன் பாதுகாப்பு குறித்தும் தேவைப்படும் நிலையில் மாற்றம் செய்து, அதன் பாதுகாப்பு தன்மை குறித்தும், மின்சாரம் சீரான நிலையில் வழங்கும் நிலை குறித்தும் சான்றிதழ் வழங்கிட வேண்டும். தமிழ்நாடு மின் மற்றும் மின்பகிர்மான கழகத்தினர் மின் பராமரிப்பு பணிகளை விரைந்து முடித்து தடையின்றி மின் விநியோகம் செய்யும் பணியினை உறுதி செய்திட வேண்டும். சீரான மின் அழுதத்தில் மின் விநியோகம் செய்வதனை உறுதி செய்திட வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறையினர் தேவைப்படும் இடங்களில் குடிநீர் வழங்க உறுதி செய்ய வேண்டும். குளோரின் கலந்த குடிநீர் பொதுமக்களுக்கு வழங்க உறுதி செய்திட வேண்டும். மாநாட்டிற்கு வருகை தரும் பக்தர் மற்றும் பொதுமக்களுக்கு தரமான குடிநீர் வழங்கிட அதற்கு உரிய அலுவலர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநாட்டிற்கு வரும் பக்தர்களுக்கு 20 சக்கர நாற்காலி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு தன்னார்வளர்கள் 20 நபர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றுவார்கள். முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் பேருந்து நிலையத்திலிருது மாநாடு நடைபெறும் இடத்திற்கு வந்து செல்வதற்கு 10 பேட்டரி கார் பயன்படுத்தப்படவுள்ளது..

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தளங்கள் குறித்து துண்டு பிரசுரங்கள் சுற்றுலாத்தறையின் மூலம் வழங்கப்படவுள்ளது. இம்மாநாட்டிற்கு வரும் பொதுமக்களை ஒழுங்குபடுத்திடவும், பாதுகாப்பினை உறுதி செய்திடவும் எவ்வித சிரமமின்றி வந்து செல்வதனை உறுதிப்படுத்திடும் வகையில் தேவையான காவலர்களை நியமிக்க காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தண்டாயுதபாணி கோவில் நிர்வாகத்தின் சார்பில் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட 168 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 226 இடங்களில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 78 இடங்களில் மராமத்துப்பணிகள் ரூ.12.84 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். விழாவிற்கு வரும் பொதுமக்கள் தங்களது வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக 600 முதல் 1000 வாகனங்கள் நிறுத்துவதற்கு வாகனம் நிறுத்துமிடம்தாயர் நிலையில் வைக்கபட்டுள்ளது. பொதுமக்கள் விழா நடைபெறும் இடங்களை கண்டுகளிப்பதற்கு 22 இடங்களில் எல்இடி திரை வசதி ஏற்படுத்தப்படுகிறது.

அனைத்துதுறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை தாங்களே முன்நின்று இருந்து பணிகளை மேற்கொள்வதன் மூலம் எவ்வித தொய்வின்றி செய்திட முடியும். இதன் மூலம் பொதுமக்களுக்கு அரசின் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் எளிதில் சென்றடையும். பொதுமக்கள் எளிதான முறையில் வந்து செல்ல வழிவகுக்கும். அனைத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் பி.என். ஸ்ரீதர் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப் மாவட்ட வருவாய் அலுவலர் சே.ஹா.சேக்முகையதீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கோட்டைக்குமார், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் செ.மாரிமுத்து, ச.இலட்சுமணன். கார்த்திக் உட்பட அரசு துறை அலுவலர்கள் பலர் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

பல்லடம் அருகே மறைந்த முன்னாள் எம்எல்ஏ என்.எஸ்.பழனிசாமியின் மணிமண்ட விழா,

# எதிர்க்கட்சி சட்டமன்ற தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் ரிப்பன் வெட்டி திறப்பு விழா



தாராபுரம், ஆக 19-

தன் வாழ்நாள் முழுவதும் விவசாயிகளுக்காவே அர்ப்பனித்து மறைந்த முன்னாள் கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் என்.எஸ். பழனிசாமி 82வது பிறந்த நாளை முன்னிட்டு மணி மண்டப திறப்பு விழா.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் வட்டம் நாதகவுண்டன்பாளையம் கிராமத்தில் நடைபெற்றது. இந்த மணிமண்டபத்தை முன்னால் முதல்வரும், அஇஅதிமுக பொதுச் செயலாளருமான புரட்சித்தமிழர் எடப்பாடி. பழனிச்சாமி திறந்து வைத்து மறைந்த விவசாயி என்.எஸ். பழனிச்சாமி"க்கு மரியாதை செலுத்தினர்.

ஏர்முனை இளைஞர் அணி செயல் தலைவர் என்.எஸ்.பி. வெற்றி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னால் அமைச்சர்கள் செங்கோட்டையன், எஸ்.பி.வேலுமணி, தங்கமணி, பொள்ளாச்சி ஜெயராமன், உடுமலை ராதாகிருஷ்ணன், எம்.எஸ்.எம்.ஆனந்தன், செமா. வேலுச்சாமி, தாமோதரன், கருப்பண்ணன், ராமலிங்கம், தனபால், சட்டமன்ற உறுப்பினர்கள் மகேந்திரன், கே.என்.விஜயகுமார், கந்தசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் குணசேகரன், கரைப்புதூர் நடராஜன், பரமசிவம், என்.எஸ். நடராஜன், சிவசாமி, கொங்குநாடு தேசிய மக்கள் கட்சி பொதுச் செயலாளர் ஈஸ்வரன், தமிழ்நாடு கொங்கு பேரவை நிறுவனர் தனியரசு, இந்து மக்கள் கட்சி நிறுவனர் அர்ஜுன் சம்பத், இந்திய காங்கிரஸ் தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் தென்னரசு, கல்வியாளர் டாக்டர். ஜெய்லானி, உட்பட அதிமுக நிர்வாகிகள், விவசாயிகள், பொதுமக்கள் என ஏராளமான பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சி முன்னதாக காலை 6 மணிக்கு பேரூர் ஆதினம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் தலைமையில் வேள்வி வழிபாடு நடத்தினார். இந்த நிகழ்ச்சியில் மொத்தம் சுமார் 4000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலர் கலந்து கொண்ட நிகழ்ச்சி சிறப்பித்தனர்..

உடுமலை திருமூர்த்தி அணையில் இருந்து

# இரண்டாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு: அமைச்சர் சாமிநாதன் பங்கேற்பு





உடுமலை : ஆக. 19

திருப்பூர் மாவட்டம் உடுமலை திருமூர்த்தி அணை மூலம் கோவை திருப்பூர் மாவட்டங்களில் சுமார் 3.77 லட்சம் ஏக்கர் பாசனங்கள் பயன்படுத்து வருகின்றன நான்கு மண்டலங்களாக பிரித்து பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது இந்த நிலையில் இன்று இரண்டாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீரை அமைச்சர் சாமிநாதன் திறந்து வைத்தார்.

இதன் மூலம் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலை மடத்துக்குளம் திருப்பூர் பல்லடம் தாராபுரம் மற்றும் காங்கேயம் ஆகிய வட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி மற்றும் சூலூர் ஆகிய வட்டங்களில் மொத்தம் 94 ஆயிரத்து 201 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்படுகின்றது

திறக்கப்படும் தண்ணீர் ஆனது இன்று முதல் வருகின்ற டிசம்பர் 16ஆம் தேதி வரை 120 நாட்களுக்கு 4 சுற்றுகளில் உரிய இடைவெளி விட்டு 8000 மில்லியன் கன அடி மில்லியன் திறக்கப்படுகிறது தற்சமயம் திருமூர்த்தி அணை மொத்த 60அடியில் 57.21 அடியாக உள்ளது அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 889 அடியாக உள்ளது தற்சமயம் பிரதான கால்வாயில் 250 கன அடி திறக்கப்பட்டுள்ளது படிப்படியாக நீர் வெளியேற்றம் அதிகரிக்கப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிறிஸ்துராஜ் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வர சாமி பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்

# "விவசாயிகளுக்கு எதிராக காவல்துறையை ஏவி தமிழக அரசு பழிவாங்குகிறது" – பி.ஆர்.பாண்டியன்



கோவை : ஆக. 19

விவசாயிகளுக்கு எதிராக காவல்துறையை ஏவி திமுக அரசு பழிவாங்குகிறதோ என சந்தேகம் எழுந்துள்ளதாக விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

கோவை காரமடை, பொள்ளாச்சி ஆகிய இரு இடங்களில் விவசாயிகள் டிராக்டர் பேரணி நடத்த காவல்துறை ஆய்வாளர்கள் அனுமதி மறுத்து விவசாயிகளை துன்புறுத்தியதைக் கண்டித்து கட்சி சார்பற்ற ஐக்கிய விவசாயிகள் சங்கம் எஸ்கேபி (என்பி) சார்பில், கோவை செஞ்சிலுவை சங்கம் அருகே ஆர்ப்பாட்டம் நேற்று நடந்தது.

சங்கத்தின் தமிழக இணை ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.பாபு தலைமை வகித்தார். மாநில ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன் முன்னிலை வகித்து பேசினார். போராட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் காவல்துறையினரின் நடவடிக்கையைக் கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பி.ஆர்.பாண்டியன் பேசியதாவது: தமிழகத்தில் பல இடங்களில் டிராக்டர் பேரணி அமைதியான முறையில் காவல்துறை பாதுகாப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் கோவை மாவட்டத்தில் காரமடை மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் காவல்துறை ஆய்வாளர்கள் ராஜசேகர், வெங்கடேஷ் ஆகியோர் டிராக்டரில் பேரணியாக வந்த விவசாயிகள் மீது தாக்குதல் நடத்தியதுடன், வாகனங்களை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து பெண் விவசாயிகளை இரவு 7.30 மணி வரை தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்து சித்ரவதை செய்துள்ளனர். பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

வாகன பேரணி நடத்த அனுமதி உள்ளது என ஆகஸ்ட் 14-ம் தேதி நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் காரமடை, பொள்ளாச்சியில் நடந்த சம்பவங்கள் சட்ட விரோதமானது மட்டுமின்றி நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் வகையில் இரு காவல் ஆய்வாளர்கள் செயல்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக தமிழக விவசாயிகள் மீது காவல்துறையை ஏவி திமுக அரசு பழிவாங்குகிறதோ என்ற அச்சம் தோன்றியுள்ளது. சந்தேகம் எழுந்துள்ளது.

தவறு செய்த காவல் ஆய்வாளர்கள் மற்றும் தாக்குதல் நடத்தியவர்கள் மீது தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் ஆகஸ்ட் 27-ம் தேதி திருச்சியில் நடைபெறும் சங்க கூட்டத்தில் பங்கேற்க டெல்லியில் இருந்து விவசாயிகள் வருகின்றனர். கூட்டத்தில் கலந்துரையாடி நிறைவேற்றப்படும் தீர்மானத்தை பொறுத்து அடுத்த கட்ட போராட்டங்களை தீவிரப்படுத்துவோம் என எச்சரிக்கிறேன் என்று பி.ஆர். பாண்டியன் தெரிவித்தார்.



► முதலமைச்சர், சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த செவிலியர் ஆ.சபீனாவுக்கு வழங்கியதை தொடர்ந்து, நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரிடம் நேரில் காண்பித்து வாழ்த்து பெற்றார்.






உடுமலை நகராட்சியின் அலட்சியம் காரணமாக

# சிறுவர் பூங்கா சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி வரும் அவலம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர கோரிக்கை





உடுமலை: ஆக. 19

திருப்பூர் மாவட்டம் உடுமலை நகராட்சி அண்ணா சிறுவர் பூங்கா, பல ஆண்டுகளாகவே பயன்பாடில்லாமல் பூட்டியே கிடப்பதால், 'குடிமகன்களின்' பாராக மாறி வருகிறது உடுமலை பார்க் ரோட்டில், நகராட்சிக்கு சொந்தமான, அண்ணா சிறுவர் பூங்கா உள்ளது. பழமையான இந்த பூங்காவைபல ஆண்டுகளாக பராமரிக்காமல் விட்டதால், புதர் மண்டி பாழடைந்த நிலையில் உள்ளது மேலும் பூங்காவில், உள்ள விளையாட்டு தளவாடங்கள் துருப்பிடித்தும், ஆபத்தான நிலையிலும் பயன்படுத்த நிலையிலும் உள்ளது

இதுகுறித்து உடுமலை பொதுமக்கள் கூறியதாவது

உடுமலையில் பல ஆண்டுகளாக பயன்பாடில்லாமல் பூங்கா பூட்டிய நிலையில் உள்ளது. இதற்கிடையில் அருகில், 'டாஸ்மாக்' கடையில் பலரும் மது வாங்கி மது அருந்தும் இடமாக தற்போது மாறிஉள்ளது மேலும் விடுமுறை நாட்களில், பூங்காவின் அருகில் குடிமகன்கள், நிலையில்லாமல் அரைகுறையான ஆடையுடன் படுத்துக்கிடப்பதும், பொதுமக்களை பெரிதும் முகம் சுழிக்க வைக்கிறது.

மாலை நேரங்களில் அவ்வழியாக செல்லவே மக்கள் அச்சப்படுகின்றனர். மேலும் இரவு நேரங்களில் கஞ்சா உட்பட்ட தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் இடமாகவும் மாறி உள்ளது ஆகையால் பழமையான பூங்காவை, தூய்மை படுத்தி மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவருவதோடு, பாதுகாவலர் நியமிக்கவும், நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கிறோம் என்றனர்

Printed,Published and Owned by P.HARIHARAN. TamilagaExpressNews Tamil Daily Printed at KUMARAN PRINTER , No.D15, Truck Terminal Complex, Madhavaram, Chennai - 600 110. and Publised at No.3, Renganayagi Nagar 1st Street,Siluvathur Road , Balakrisnapuram,Dindigul -624005.Editor: P.HARIHARAN.